**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8075879

C

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 05/AC/2023 Date: நாள் 12.06.2023

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 30.11.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.06.2023 Time : நேரம் 17.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o the S.121 Adhiyamankottai Primary Agricultural Co-operative Credit Society, Nallampalli Taluk, Dharmapuri District.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Chithambaram (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Jayavel
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 63 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Ex-Serviceman (g) Address : முகவரி No. 6/214 Puravadai Village, A-Jettihalli Post, Nallampalli Taluk, Dharmapuri District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. S.G. Durairaj, Secretary, S.121 Adhiyamankottai Primary Agricultural Co-operative Credit Society Ltd., Nallampalli Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer incharge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 12/06/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.06.2023 At 19.30 hrs

Name: பெயர் P. PALANISAMY
Rank: நிலை Inspector of police, V & AC, Dharmapuri.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2023 u/s 7(b) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

*****

இன்று 12.06.2023ம் தேதி மாலை 17.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தர்மபுரி மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து 04.01.2023 அன்று பெறப்பட்ட Crl.M.P.No.9725/2022 என்ற மனுவில் 21.12.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், ஏ.ஜெட்டிஅள்ளி அஞ்சல், புறவடை கிராமத்தை சேர்ந்த ஜெயவேல் மகன் திரு.J.சிதம்பரம் வயது 63 என்பவரது 25.01.2022–ம் தேதியிட்ட புகாரின் பேரில் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல்:_சிதம்பரம் (வயது–63) Ex.Army, த/பெ.ஜெயவேல், புறவடை கிராமம், ஏ.ஜெட்டிஅள்ளி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தர்மபுரி மாவட்டம், Pincode:-636807. செல்: 9344420788 பெறுதல்: 1) உயர் திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு பிரிவு, தருமபுரி. Pincode:-636705. 2) உயர் திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு பிரிவு, தருமபுரி. Pincode:-636705. <u>பொருள்:</u> எனக்கு கோழிப்பண்ணை அமைக்க வங்கி கடன் வழங்கியதில் சட்ட விரோதமாக 5000/– ரூபாய் பிடித்துக்கொண்டது, கடன் காப்பீட்டு தொகை 435/– ரூபாய்க்கு பதிலாக ஏமாற்றி 3550/– பெற்றது, இதை கேட்ட என்னை மிகவும் மிகவும் ஆபாசமான வார்த்தையால் திட்டி உன்னை கொள்ளாமல் விடமாட்டேன் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்த அதியமான்கோட்டை PACCS செயலாளர் திரு.துரைராஜ் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க கோருதல் தொடர்பாக. மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் நான் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 1977–ம் வருடம் இந்திய ராணுவத்தில் பணியில் சேர்ந்து கடந்த 1994–ம் வருடம் ஓய்வு பெற்றேன். எனது பணி ஓய்விற்கு பின்பு நான் எனது பூர்விக சொத்தில் விவசாயம் செய்துவந்தேன். இந்நிலையில் கடந்த 2019–ம் வருடம் அதியமானகோட்டை PACCS கூட்டுறவு சங்கத்தில் கோழிப்பண்ணை அமைக்க கடன் தருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் அதன் செயலாளர் திரு. துரைராஜ் என்பவரை அணுகி விபரம்

கேட்டேன். மேற்படி செயலாளர் திரு.துரைராஜ் அவர்கள் 6,00,000/– ரூபாய் கடன் தருவதாகவும், இரண்டு மாத காலகட்டத்திற்குள் மூன்று தவணைகளாக தருவதாகவும், கோழி பண்ணை அமைக்கும் இடத்தின் ப்ளூ பிரிண்ட், லீகல் ஒப்பீனியன் பெற்றுக்கொண்டு நிலம் ஒரு ஏக்கர் அடமான பத்திரம் எழுதி கொடுக்க சொன்னர் மேலும் மத்திய கூட்டுறவு வங்கியில் வாங்கிக்கணக்கு தொடங்க சொன்னார். அதில்தான் கடன்தொகை வைப்பீடு செய்வதாக கூறினார் நானும் வங்கி கணக்கு துவங்கினேன். நானும் அவர் சொல்லியவற்றினை செய்தேன். பின்பு நான் எனது சொந்த முதலீடாக 72,000/– ரூபாய் மற்றும் பங்கு தொகையாக 60,000/–ரூபாய் கட்டினாள் தான் லோன் தர முடியும் என்று கூறிவிட்டார். அதன்பின்பு நான் வட்டிக்கு வெளியில் கடன் வாங்கி கட்டினேன். எனக்கு நான் கட்டிய பணம் சேர்த்து 05.11.2019 அன்று முதல் தவணையாக 2,40,000/–ரூபாய் கொடுத்தார்கள். இரண்டாவது தவணை கோழிப்பண்ணை ஆரம்பகட்ட வேலைமுடித்தும், பலமுறை செயலாளர் திரு.துரைராஜ் வலியுறுத்தியும் எனக்கு உடனே இரண்டாவது தவணை லோன் தொகை தரவில்லை, நான்கு மாதங்கள் கழித்து 11.03.2020 அன்று தான் எனக்கு இரண்டாவது தவணை பணம் ரூபாய் 2,16,000/– கொடுத்தார்கள். அதன் பின்பு கொஞ்சம் கோழிப்பண்ணை முழு வேலை முடிக்க காலதாமதமானது ஜீலை முதல் வாரம் 2020 வாக்கில் கொரனோ காலகட்டமானாலும் கோழிப்பண்ணை முழுவேலையும் முடித்துவிட்டேன். அதன்பின்பு பலமுறை கோழிக்குஞ்சி வளர்க்க மூன்றாவது தவணை தொகை கேட்டும் தரவில்லை. தொடர்ந்து நான் வலியுறுத்தி வந்தநிலையில் 30.11.2020 அன்று செயலாளர் திரு.துரைராஜ் என்னை கூட்டுறவு வங்கிக்கு அழைத்தார். நானும் சென்று மூன்றாவது தவணை கடன் தொகையினை கேட்டேன். அப்போது அவர் தவணை தொகை 1,21,000/–ம் பிடித்துக்கொண்டு எனக்கு 95,127/– ரூபாய் மட்டும் தரமுடியும் என்றார். நான் கேட்டதற்கு தவணை தொகை மற்றும் வட்டி ஆகியவை என்றார். நான் மிகவும் வற்புறுத்தியும் முழு தொகை கொடுத்தால் தான் நான் கோழி வளர்க்க முடியும் என்றேன். அவர் முடியவே முடியாது என்றதோடு யோ மிலிட்டரி நீ ஒசுலையே எல்லா வேலையும் ஆகனுன்னு பார்க்குற என்று கேவலமாக திட்டினார். நான் பணத்தினை வாங்க மறுத்தேன் மேலும் எனது வங்கிக்கணக்கில் வரவு வையுங்கள் அப்போது தான் நீங்கள் எவ்வளவு பணம் தந்துள்ளீர்கள் என்று தெரியும் என்றேன். அப்போது மிலிட்டரி நீ ஒன்னும்

எனக்கு ஆர்டர் போடாத போய் என்ன புடுங்குறிய புடுங்கு என்றும் சும்மா, சும்மா தொந்தரவு பண்ணாத பார்க்கிறிய உன்ன உண்டு இல்லையின்னு பண்ணிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். நான் செலுத்திய தொகைகளை ரசீது கேட்டேன் அவரும் கொடுத்தார் அதில் கடன் காப்பீடாக 435 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது ஆனால் என்னிடம் அவர் 3550/– ரூபாய் ஏமாற்றி பெற்றுள்ளார். மேலும் என்னிடம் 95,000/– ரூபாயில் 5,000/– அவரே எடுத்துக்கொண்டு மீதியைத்தான் கொடுத்தார். நான் எதற்கு என்று கேட்டதற்கு அவர் எல்லோரும் 20,000/– தராங்க நீ ரொம்பத்தான் இல்லாத ஆளுமாதிரி பீத்துர என்று கேவலமாக திட்டினார். ஆகவே ஐயா அவர்கள் என்னிடம் கடன் தொகையிலுருந்து 5000/– ரூபாய் சட்டவிரோதமாக எடுத்துக்கொண்டது, கடன் காப்பீட்டு தொகை 435/– ரூபாய்க்கு பதிலாக 3550/– ரூபாய் ஏமாற்றி பெற்றது. இவற்றினை கேட்ட என்னை ஆபாசமான வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தது உள்ளிட்ட குற்றங்களை அதியமான் கோட்டை கூட்டுறவு வங்கியின் செயலாளர் திரு.துரைராஜ் அவர்கள் புரிந்துள்ளார் ஆகவே ஐயா அவர்கள் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இடம்: Dharmapuri, தேதி: 25.01.2022. இப்படிக்கு ஒப்பம் சிதம்பரம் 25.01.2022. **<u>இணைப்பு:</u>** 1) 20.09.2020 அன்று தங்களுக்கு நான் அனுப்பிய புகார் மனுவின் நகல், 2) கடன் காப்பீட்டு தொகை ரசீது, 3) செயலாளர் அவர்கள் வழங்கிய ரசீது, **<u>நகல்கள்</u>**: 1) **Directorate of Vigilance and Anti-Corruption,** No.293, MKN Road, Alandur, Chennai-600 016, 2) The Superintendent of Police, Dharmapuri District.

Affidavit and Petition are perused. Directed the Inspector of Police, Vigilance and Anti-Corruption wing at Dharmapuri to register First Information Report and investigate the matter in accordance with law. ஒப்பம் CJM, Dharmapuri Date. 21.12.2022.

Sir Received the order of Hon'ble Chief Judicial Magistrate, Dharmapuri and also received the prior approval u/s 17(A) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 from the Joint Registrar, Co-Operative Societies, Dharmapuri Vide R.C.No.754/2023 Thosa, dated 17.05.2023 who is the

competent authority to remove the accused from his office, at the time when the offence was alleged to have been committed and registered a case in Dharmapuri Vigilance and Anti-Corruption Cr.No.05/AC/2023 u/s 7(b) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 today 12.06.2023 at 17.30hrs against the accused. The copy of complaint dated.25.01.2022 and the affidavit filed by the complainant may be read as part and parcel of the FIR. The Original FIR and the order of the Hon'ble Chief Judicial Magistrate, Dharmapuri along with the affidavit, copy of petition dated. 25.01.2022 is sent to the Hon'ble court of the Special Judge / Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

**(P.Palanisamy)**, 12/06/23
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.